திரு. த. சோனையா : இந்த மேம்பாலங்கள் கட்டப்படுவதால் இரண்டு தெருக்களில் உள்ள கடைகளுக்கு இடைஞ்சல் இருப்பதாக மகஜர் அனுப்பப் பட்டிருக்கிறது. இந்த மேம்பாலங்களுக்குகீழ் உள்ள இடத்தில் கடைகள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே அப்படிக் கடைகளைக் கட்டினால் வாடகை மூலம் வருமானம் கிடைக்கும். அதைச்செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது ஒரு நல்ல ஆலோசனை. மேம்பாலங்களுக்குக் கீழே கடைகள் வைக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

Bridges

* 227 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the proposals under examination for the improvement of Suchindram bridge on Nagercoil-Cape Comorin route?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசிய நெடுஞ்சாலை எண் 47. திருவனந்தபுரம்–கன்னியாகுமரி சாலை மைல் 46/1-ல் உள்ள பாலத்தை சீர் அமைப்பதற்கான பணி 1972-73-ம் ஆண்டு நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் உள்ளது. பாலத்தின் அமைப்பும் திட்டப் பட்டியலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அது ஒரு ஒடுங்கிய அகலமில்லாத பழைய பாலமாக இருப்பதால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே உடனடியாக அதைச் சீரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு அது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கணபதியான்கடவு, ஞாலாங்குளம் பாலம் போன்ற பல்வேறு பாலங்கள் சீரமைக்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன. இதுவரையில் அவையெல்லாம் கட்டப்படவில்லை. எனவே, இனிமேலாவது ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒவ்வொரு பாலமாகவாவது எடுத்துக் கொண்டு முடிக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை, தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.